1972 ஆகஸ்ட் 21]

கிடைக்குமா என்ற சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறார்கள். இருந்தாலும் மேலும் பயிற்சி தொடங்குவதாக இல்லை.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இங்கே பயிற்சியாளர்கள் செய்த தேர்கள் எங்கெல்லாம் வெள்ளோட்டம் விடப்பட்டது, நல்லமுறையில் ஓடுகிறதா என்று அரசாங்கத்துக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, எந்தெந்த ஊர்களில் தேர்கள் ஓடுகின்றன என்ற விவரமில்லை. ஆனால் பயிற்சி பெற்றவர்கள் பல கோவில்களில் தேர்கள் செய்யக்கூடிய வேலை பார்த்து வருகிறார்கள். உதாரணமாக மதுராந்தகத்தில் தேர் வேலை பார்த்து வருகிறார்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : பள்ளியில் பயிற்றுவிக்கப்படுவது பழைய காலத்து முறையிலே பயிற்றுவிக்கப்படுமா அல்லது புதிய முறையில், தானே இயங்குகிற முறையிலே பயிற்றுவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, பழைய பண்பாடுகள் குன்றாமல் தேர்கள் செய்யும் முறை பின்பற்றப்படுகிறது.

Industrial Estates.

*145 Q.—THIRU K. RAJARAM (on behalf of Thiru V. ISVARMURTI): Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the expansion carried out during 1971–72 at the Industrial Estates in the State, district-wise?

தொழிற்பேட்டைகள்

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1971–72-ல் மாவட்ட வாரியாக இம்மாநிலத்தில் உள்ள தொழிற்பேட்டைகளில் மேற்கொள்ளப்பட்ட தொழில் வளர்ச்சிப் பணிகளின் விவரங்கள் யாவை?

[1972 ஆகஸ்ட் 2!

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1971–72-இல் கீழ்க்கண்ட தொழிற்பேட்டைகள் விரிவுப்படுத்தப்பட்டுள்ளன:—

மாவட்டம்.	தொழிற்பேட்டை.	1971–72-ல் கூடுதலாகக் கட்டப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை.
செங்கல்பட்டு.	அம்பத்தூர்	20
,,	கக்கனூர்	4
சென்னை.	கிண்டி	10
வட ஆற்காடு.	காட்பாடி	4
தென் ஆற்காடு	விருத்தாசலம் ..	16 (சிறியவை)

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, மேலும் காட்பாடியில் விரிவுபடுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா? ராணிப்பேட்டையில் புதிய தொழிற்கூடம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தொழில் திட்டம் இல்லாமல், இடம் வாங்கப்பட்டு, கட்டடம் கட்டி, விரயம் ஆக்கக்கூடாது என்ற அரசினருடைய புதிய கொள்கைப்படி, எங்கேயெல்லாம் தொழில் செய்ய முன்வருகிறார்களோ அங்கெல்லாம் தொழிற்பேட்டை கட்டிக்கொடுக்க முயற்சி செய்திருக்கிறோம். காட்பாடியில் முன்வந்தால், கட்டிக் கொடுக்கப்படும்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் இருக்கக்கூடிய தொழிற்பேட்டைகளில் எல்லா தொழிற்பேட்டைகளும் முழுவதும் இருக்கின்றனவா அல்லது காலி இடங்கள் இருந்து, வசதிகளை இன்னும் பயன்படுத்திக்கொள்ள இயலாத நிலை தொழிற்பேட்டைகளில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, பெரும்பாலும் கிராக்கி இருக்கிறது. ஆனால் "மொஃபுசில் இன்டஸ்டிரியல் எஸ்டேட்டில்" சில இடங்கள்—ஒன்றிரண்டு இடங்கள்—காலி இருக்கின்றன. மற்ற இடங்களில் கிராக்கி இருந்துகொண்டிருக்கிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் சில தொழிற்பேட்டைகளில், அந்தக் காலி இடங்களுக்கு ஏதாவது விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா? குறிப்பாக விருதுநகர், சிவகாசியில் காலி இருப்பதாகத் தகவல் உண்டா?

1972 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, விருது நகரில் யாரும் முன்வராத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே "ஹையர் பர்ச்சேஸ்" திட்டமாக மாற்றியிருக்கிறோம்.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இராணிப்பேட்டையில் தொழிற்பேட்டைக்காக இடம் வாங்கப்பட்டு, இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமலிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே பலமுறை விளக்கம் தரப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு ஏராளமான நிலம் வாங்கியிருக்கிறார்கள். ஏன், எதற்கு வாங்கியிருக்கிறார்கள் என்ற குறிப்பு அரசிடத்தில் இல்லை. ஆகவே அவைகளைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னரே, மாவட்ட ஆட்சித் தலைவரும், இந்தத் துறையின் இயக்குநரும் அங்கே சென்று, அங்கே உள்ளவர்களுக்கு ஊக்கம் கொடுத்து, "இன்ன உதவி செய்வோம், இந்த இடத்தைப் பெற்றுத் தொழில் செய்ய வாருங்கள்" என்று கூறியிருக்கிறார்கள். ஏதாவது புரட்சிகரமான அளவிலே, பிரதிபலன் (ரெஸ்பான்ஸ்) இருப்பதாகத் தெரியவில்லை. அங்கத்தினர் அவர்கள் மேற்படி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இராணிப்பேட்டையிலிருந்து ஒரு 100, 200 தொழில் அதிபர்கள் கூடுவார்களானால், அரசாங்க உதவியோடு, அந்த இடத்தைப் பயன்படுத்துகிற வாய்ப்பு ஏற்படும்.

புலவர் ஓ. அறிவுடைநம்பி : தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூரில் தொழிற்பேட்டை தொடங்க் முயற்சி எந்தளவுக்கு இருக்கிறதென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இதிலே இடத் தகராறு இருந்ததாக நினைவு. இப்போதுதான் அது தீர்க்கப்பட்டிருக்கிறது. விரைவிலே கட்டப்படும்.

Village Courts.

*146 Q.—THIRU L. BALARAMAN and Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have taken any steps to establish village courts in villages; and

(b) if so, the date on which they will begin to function?